28th February 1968]

எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நீதிமன்றத்தை வேண்டிக் கேட்டுக் கொண்டு இருக்கிறார் அரசாங்க வழக்கறிஞர். இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்தின் பாதிப் பணத்தோடு நிறைவேறுகிற திட்டமாகும்.

Cauverippoompattinam

* 124 *Q.*—THIRU P. ETHIRAJ : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal to convert the Cauverippoompattinam sea-shore as a picnic place, and to construct a park in the sea-shore and to erect Karikalasholar's statue in that place ?

காவிரிப்பூம்பட்டினம் கடற்கரைப் பகுதி

திரு. பி. எத்திராஜ் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

காவிரிப்பூம்பட்டினம் கடற்கரைப் பகுதியில் அழகான பூங்கா அமைத்து அதில் கரிகாற் சோழ மன்னனின் சிலையையும் அமைத்து யாத்திரிகர் ஸ்தலமாக ஆக்குவதற்கு அரசினருக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இத்தகைய உத்தேசம் எதுவும் தற்போது இவ்வரசிடம் இல்லை.

திரு. பி. எத்திராஜ் : தலைவரவர்களே, இந்தக் காலத்தில் தமிழ் என்ற பெயரால் யார் யாருக்கோ சிலை வைக்கும்போது தமிழ்நாட்டின் மதிப்பை உயர்த்தும் வகையில் கல்லணையை கட்டி காவிரியைத் தஞ்சை மாவட்டத்தில் பாயச் செய்து நெற் களஞ்சியமாக ஆக்கிய அந்தப் பெரிய அரசனின் தலைநகரமாக விளங்கும் இடத்தில் அரசன் கரிகாலனுக்கு சிலை வைக்க இந்த அரசாங்கத்திற்கு ஏன் துணிவு வரவில்லை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்களின் மனப்பான்மையைப் பாராட்டுகிறேன். அப்படிப் பட்ட காரியம் விரைவில் நடைபெற அரசாங்கம் உத்தேசிக்கலாம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, உறையூரிலிருந்து காவிரிப்பூம்பட்டினத்தை உருவாக்கி பூம்புகார் என்ற பெயர் வைத்தவன் கரிகால் பெருவளத்தான். அவனுக்கு சிலை வைப்பது மாத்திரமல்ல கோவலன், கண்ணகி போன்ற வரலாற்று படைப்புகள் தோன்றிய இடமாகும். அது. அங்கு கண்ணகிக்குச் சிலை வைக்கப்போவதாகப் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை கூட விட்டிருந்தார்கள். எப்போது இந்தச் சிலைகள் வைக்கப்படும்.?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கண்ணகிக்கு சென்னையில் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. பூம்புகாரில் சிலை வைக்க முயற்சிகள் மேலும் நடைபெறலாம். உறுதியாகச் சொல்லுவதற்கில்லை.

DR. M.A. MUTHIAH CHETTIAR : Will the Hon. Minister be pleased to state whether they will make Cauverippoompattinam a sea-side resort like Mahabalipuram ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட உத்தேசம் இதுவரையில்லை. மேலும் அதைப் பற்றி சிந்தித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று கருதுகிறேன்.

Nationalisation of Cinema Industry

* 125 *Q.*—THIRU P. ETHIRAJ : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal to nationalise the cinema industry and the cinema theatres ?

சினிமாத் தொழிலை தேசியமயமாக்குதல்

திரு. பி. எத்திராஜ் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

சினிமாத் தொழிலையும், சினிமா தியேட்டர்களையும் தேசியமயமாக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது இல்லை.

திரு. பி. எத்திராஜ் : தலைவரவர்களே, இப்போழுது இல்லை என்ற பதிலை விட இப்போதுள்ள அரசாங்கத்தின் பொருளாதார நெருக்கடியை உத்தேசம் பண்ணி அந்தந்த ஜில்லாக்களின் தலைநகரில் உள்ள தியேட்டர்களை தேசியமயமாக்கும் அடிப்படையில், இப்பொழுது பஸ்களை அரசாங்கம் தனியாரிடமிருந்து எடுத்துக்கொண்டிருப்பதைப் போல் முக்கியமான இடங்களிலாவது ஏற்றுக்கொள்வதின் மூலம், அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். அதை ஏற்று நடத்த அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மற்ற மாநிலங்களில் இது போன்ற தியேட்டர்களை சர்க்கார் தேசியமாக்கி நடத்திக் கொண்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அவைகள் எப்படி நடைபெறுகிறது என்பதையறிந்து பிறகு இங்கும் அதுபோல செய்ய சர்க்கார் முனைவரலாம்.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : தலைவரவர்களே, படப்பிடிப்புத் தொழிலில் லாபத்தை நோக்கமாகக் கொண்டு கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கு இடம் அளிக்கும் வகையில் அது போய்க்கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகையால் சமூகத்தில் நல்ல கருத்து பரவும் வகையில் படங்கள் எடுக்கும் வேலையை சர்க்காரே மேற்கொள்ள முன் வருவார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட திட்டம் இப்போதில்லை. இப்போதிருக்கிற உத்தேசமெல்லாம் தியேட்டர்களை மட்டும் தேசியமயமாக்கும் முறையில்தான் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. சினிமாத் தொழிலை தேசியமாக்கும் திட்டம்பற்றி இப்போது உத்தேசமில்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, வெளி மாகாணங்களில் கொட்டகைகளை நடத்துவதாக தகவல் வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொட்டகையைமட்டும் நடத்துகிறார்களா? அல்லது படப்பிடிப்பையும் அவர்களே நடத்துகிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கொட்டகையை மட்டும் தான் நடத்திக்கொண்டுவருவதாக தகவல் கிடைத்துள்ளது.

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, சினிமா கொட்டகைகளை ஏற்று நடத்த சர்க்கார் உத்தேசிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கொட்டகைகளை ஏற்று நடத்துவதில் நஷ்டம் ஏற்படும். ஆகையால் சினிமா ஸ்டூடியோக்களை ஏற்று நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த உத்தேசம் இப்போதில்லை.

Indian Medical Practitioners, Kanyakumari district

* 126 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that even though it has been laid down that the Indian Medical Practitioners serving in Kanyakumari District who are registered under the